# நல்ல மேய்ப்பன்

1




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**ஆனால் ஒரு ஆடு தொலைந்தபோதோ, அவர் தம்முடைய விரலை உபயோகிக்கவில்லை, அதைத் தம்முடைய தோள்களின் மீது கிடத்தினார், அவர் தம்முடைய முழு சரீரத்தையும், கைகளையும் பிரயோகித்து, ஆட்டை தம்முடைய தோளின் மீது வைத்தார்**







சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-0103M – கேள்விகளும் பதில்களும் #1

“நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்து கிறார்கள்?”

64 கவனியுங்கள், நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

ஓ, பிசாசு உங்கள்மேல் எவ்வளவு பெரிய ஒரு வியாதியை அல்லது எவ்வளவு பெரிய வருத்தத்தைப் ஏற்படுத்த முடிந்தாலும் பரவாயில்லை, அவைகளை அகற்ற அவருடைய விரல் ஒன்றே போதும்.

ஓ, என்னே! என்னே! அவைகள் மிகப் பெரிய வலுவான தோள்களும் கரங்களும் தசைகளும் கொண்டுள்ளன என்பதைப் பாருங்கள்.

ஆனால் அவருடைய விரல் ஒவ்வொரு வியாதியையும் பிசாசுகளையும் துரத்து கிறது.

பிசாசு என்னே ஒரு அற்பமான காரிய மாய் இருக்கிறானே!

அவர் தம்முடைய விரலைக்கொண்டு அவனைத் தூரத் தள்ளிவிடுகிறார். “நான் தேவனுடைய விரலினாலே...”

65 இப்பொழுது நான் உங்களுக்கு தேவனுடைய அன்பைக் காண்பிக்கட்டும்.

ஆனால் ஒரு ஆடு தொலைந்த போதோ, அவர் தம்முடைய விரலை உபயோகிக்கவில்லை, அதைத் தம்முடைய தோள்களின் மீது கிடத்தினார், அவர் தம்முடைய முழு சரீரத்தையும், கைகளை யும் பிரயோகித்து, ஆட்டை தம்முடைய தோளின் மீது வைத்தார்.

ஒரு மனிதனுடைய தோள்களும், முதுகும் ஒரு மனிதனின் மிகவும் பலங் கொண்டதும், வல்லமை கொண்டதுமான பாகங்களாகும். நீங்கள் அதை அறிவீர்கள்.

அவர் தம்முடைய கைத் தசைகள் மற்றும் தசைகள் செயல்பட, அவர் அந்த ஆட்டை முழுமையாக எடுத்துக்கொள்கிறார்; தூக்கி தம் தோளின் மீது போட்டுக்கொண்டு இதோ அவர் வருகிறார், அவர் ஒரு சிறிய, பழைய பிசாசை ஓட்ட தம் விரலைக்கொண்டு வருவதுபோன்று வரவில்லை, ஆனால் இங்கே தம்முடைய...எல்லா தசைகளையும், கால் தசைகளையும், கை தசைகளையும் கொண்டு, வனாந்திரத்தில் சென்று, காணாமற்போன அந்த ஆட்டை எடுத்து தம் தோளின் மீது வைத்துக் கொள்கிறார்.

ஓ, என்னே! “நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்தினால் உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?” ஓ, அல்லேலூயா! என்னே!

**54-0103M – கேள்விகளும் பதில்களும் #1**

Rev. William Marrion Branham

# மேய்ப்பன் ஆடுகளின் மீது அக்கறையுள்ளவனாக இருந்து பொறுப்பெடுக்கிறான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 56-01-29 இயற்கைக்கு மேம்பட்டவைகள்

3. பாலஸ்தீனாவில் இருக்கும்போது, அல்லது இன்னும் சரியாக நாம் சொல் வோமானால் நாம் கீழ்த்திசை நாடுக ளுக்குச் செல்வோமானால், பரிசுத்த வேதா கமத்தில் கூறப்பட்டுள்ள அந்த உவமை யைக் குறித்து நான் அடிக்கடி வியப்படை வதுண்டு. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள உவமைகள் எல்லாம் எவ்வாறு உண்மையி லேயே அர்த்தம் கொள்கிறது, பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகிறது என்பதைச் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் அநேகமாக பழைமையான மேற் கத்திய நாடுகளுக்குச் செல்லவேண்டும். ஒருமுறை நான் மேற்கத்திய ஊழியக் காரர்களோடு அமர்ந்திருந்தேன். அவர்கள்

எல்லோரும் ஒரு காரியத்தைக் குறித்து குழப்பமடைந்தவர்களாயிருந்தனர். "அவர் கள் இதற்கு என்ன அர்த்தம் கொள்கிறார் கள்?" "இது என்ன பொருளைக் குறிக் கிறது?" "அது என்ன பொருளைக் குறிக் கிறது?" என்றெல்லாம் சிந்தித்து குழப்ப முற்றவர்களாயிருந்தனர். நீங்கள் எப்போ தாவது கிழக்கத்திய நாடுகளுக்குச் செல் வீர்கள் என்றால், அவர்களின் மாறாத பழக்க வழக்கங்களைப் பார்க்கலாம். நல்லது, அங்கே பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து அதிக அதிகமாய்த் தெரிந்து கொள்ளலாம். நான் கிழக்குக்குச் சென்ற பின், அது எனக்கு புதிய புத்தகமாயிற்று.

உதாரணமாக, இயேசு சொன்னது போல, நான் பரிசுத்த யோவான் 10ம் அதிகாரம் என நம்புகிறேன். நான் அவ்வித மாக எண்ணுகிறேன். "நானே ஆட்டுத் தொழுவத்திற்கு வாசலாக இருக்கிறேன்.


நானே ஆட்டுத்தொழுவத்திற்கு வாயிலாக இருக்கிறேன்." அது என்ன பொருள்படும் என்று அடிக்கடி நான் வியந்ததுண்டு. அவர் வாசலில் நின்று, வருகிற அத்தனை ஜனங்களையும் ஏற்றுக் கொள்கிறார். அல்லது, இன்னொரு விதமாகவும் நான் சிந்தித்தேன். மேய்ப்பர் வாசலில் நின்று வருகிற ஒவ்வொரு ஆடுகளையும் இதைப் போன்று எண்ணுகிறார். அவ்விதமாக நான் வழக்கமாக நினைப்பதுண்டு. ஒருவேளை உங்களில் அனேகர், என்னுடைய சகோ தரர்கள், குருமார்கள் அத்தனை பேரும், நான் எண்ணிய விதமாகவே, நீங்களும் நினைத்திருக்கக்கூடும்.

4. ஆனால் ஒருமுறை அங்கே இருப்பீர் களானால், அங்கே ஒரு வித்தியாசத்தை நீங்கள் காண்பீர்கள். அது, ஆடுகளை எண்ணுவதல்ல. ஆனால் மேய்ப்பன் தானே வாசலாக மாறிவிடுவார். அங்கே

சுற்றிலும் அடைக்கப்பட்ட ஒரு தொழுவம் இருக்கும். அது பாதுகாப்பான இடமாக வும் இருக்கும். எல்லா ஆடுகளையும் அங்கே ஓட்டிக் கொண்டு வந்து, அதற்குள் பிரவேசிக்கச் செய்வான். பின்பு அவன் அங்கே சென்று வாசலில் குறுக்காகப் படுத்துக் கொள்வான். அங்கே ஆடு அல்லது ஓநாய்கள் மேய்ப்பனைக் கடக்கா மல் உள்ளே பிரவேசிக்க முடியாது. அல்லது ஆடுகளும் வெளியே செல்ல முடியாது. "இது அதிசயமாக இல்லையா?" என்று நான் எண்ணிக் கொண்டேன். பாருங்கள், அவர் ஆட்டுத்தொழுவத்திற்கு வாசலாக இருக்கிறார். பாருங்கள்? மேய்ப் பர் அனுமதித்தாலொழிய, ஆட்டு மந்தை யிடத்தில் எதுவும் வரமுடியாது. நாம் வாசலில் நிற்கும் அந்த மேய்ப்பரைப் பெற்றிருப்போமானால், அது நமக்கு எவ்வளவு பாதுகாப்பாகவும் எவ்வளவு மகிழ்ச்சியாகவும் இருக்கும். மேய்ப்பர்

அனுமதித்தாலொழிய, சாத்தான் உன்னைத் தொடமுடியாது. அது என்னவாக இருந்த போதிலும் சகலமும் நன்மைக்கேது வானதே. நான் என்ன பொருள் கொண்டுள் ளேன் என்று பார்க்க முடிகிறதா?... அதாவது அவர் அவ்வாறு கூறும் போது... அந்த மேய்ப்பன். நான் மறுபடியும் கவனித்தேன்.... இந்த தேசத்தில் மேய்ப்பன் என்றால், அவ்வளவு பொருள்பட மாட்டார். ஏன், அது பழங்காலச் சொல். ஆனால் கிழக்கத்திய நாடுகளில் மேய்ப்பன் என்றால் அவ்வளவு முக்கியம் வாய்ந்த சொல்லாகும். ஓ, என்னே. அந்த ஆட்டுமந்தை ஜனங்கள், தங்களுடைய ஆட்டு மந்தை மூலமாகவே ஜீவியம் நடத்துவார்கள். மேய்ப்பன் ஆடுகளின் மீது அக்கறையுள்ளவனாக இருந்து பொறுப் பெடுக்கிறான்.


நம்முடைய இருதயத்தின் வாசலில் இயேசுவானவர் படுத்திருக்கிறார் என்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்குத் தெரியாமல் நாம் வெளியே செல்லவோ அல்லது எந்தக் காரியத்தையும் செய்யவோ முடியாது. எனவே அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்க அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாக செய்கிறார்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 60-1225 தேவனுடைய சுற்றப்பட்ட வெகுமதி

---

ஒரு மேய்ப்பன் ஆடுகளை மந்தை யாகக் கூட்டி, அந்த ஆடுகளோடே சரியாக வாசலண்டையிலேயே படுத்துக் கொள்கி றான். அவைகளுக்கு மத்தியிலே படுத்துக் கொள்கிறான் என்பதை எவரும் அறிவர்.

இயேசு, "நானே ஆட்டுத் தொழுவத் திற்கு வாசல்" என்றார். நான் புனித தேசங்களில் .......... இல்லை சரியாகக் கூறினால் கிழக்கு தேசங்களில் இருக்கும் வரையில் அது எப்படி அவ்விதம் இருக்கும் என்று நான் அடிக்கடி

வியந்திருக்கிறேன். மேய்ப்பனானவன் எவ்வாறு ஆடுகளை உள்ளே அனுப்பிய பின்னர் கதவண்டை படுத்துக் கொள்கிறான் என்பதை கண்டறிந்தேன்.

ஆடு அவனைக் கடந்து செல்லாமல் வெளியேற முடியாது. ஓநாய் அவனைக் கடந்து செல்லாமல் உள்ளே வரமுடியாது. அவனே வாசலாய் இருக்கிறான்.

70. **நம்முடைய இருதயத்தின் வாசலில் இயேசுவானவர் படுத்திருக்கிறார் என்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

**அவருக்குத் தெரியாமல் நாம் வெளியே செல்லவோ அல்லது எந்தக் காரியத்தையும் செய்யவோ முடியாது.**

**எனவே அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாக செய்கிறார்.**

அதுவோ, "ஏதோ காரியம் வந்து கொண்டிருக்கும் போது அதற்காக

ஆயத்தப்படும்படி நம்மை எச்சரித்து, நம்முடைய இருதயத்தின் வாசலண்டை யிலே படுத்துக்கிடக்கும் ஒரு - ஒரு - ஒரு மேய்ப்பனுக்காக, ஒரு இரட்சகருக்காக தேவனுக்கு நன்றி செலுத்தக்" கூறி, தேவனைத் துதித்து, ஆரவாரமிட்டு நம்மை கூச்சலிடும்படி செய்ய வேண்டியதாய் உள்ளது. ஆம்.

---



அவர்களால் விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட அந்தப் பொருட்களுக்குப் பக்கத்திலேயே அவைகள் நடந்து வருகின்றன; வலது புறம் அல்லது இடது புறம் திரும்புவதேயில்லை; அந்த மேய்ப்பன் மீதே தங்கள் கண்களை வைத்துள்ளன





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-01-29 இயற்கைக்கு மேம்பட்டவைகள்

5. ஒரு முறை அந்த தேசத்தினூடாகச் சென்றபோது தூர கிழக்கு தேசத்தில், ஒரு சிறு காரியத்தைக் கவனித்தேன். ஒரு சமயம் அந்த தேசத்தை உருவக் கடந்து செல்லும் போது, இந்தியாவில் அவர்கள் எவ்வாறு ஒரு மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளைக் கொண்டு வருகிறான் என்று கவனித்தேன். அவன்... அங்கே அந்த உவமையை நினைவு கூர்ந்தேன். தெருக் களின் வழியாக நடந்து வரும்போது அங்கு ஒரு சிறிய குறுகலான தெரு இருந்தது. "என் ஆடுகள் என் சத்தத்தை அறியும். ஒரு அந்நியனை அவைகள் பின்பற்றிச் செல்லாது".

இப்போது, அந்த மேய்ப்பனுடைய வழிநடத்துதலின் கீழ், அந்த ஆடு பிறந்தது. அந்த சத்தத்தை அது கற்றுக்கொள்கிறது; மற்ற எந்தவொருவருடைய சத்தத்திற்கும் அது செவிகொடுக்காது. மேய்ப்பனுடைய சத்தத்தை அது கற்றுக்கொள்கிறது. வேறொரு மேய்ப்பன் அதை அழைக்கலாம், அவர்கள் விரும்பும் எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்வார்கள். ஆனால் ஆடு மேய்ப்பனை அடையாளங்கண்டுகொள்வதற்கு, மேய்ப்பனைக் குறித்து ஏதோ ஒரு சிறு காரியம் உண்டு. பாருங்கள், தேவனுடைய ஆடுகளுக்கும் அதே வழி தான் உண்டு. அந்நிய சத்தம் அவைகளுக்கு சரியாக தொனிக்காது. அவைகள் அங்கு போகாது அவ்வளவு தான். ஆடு சோதிக்கப்படக் கூடுமானால், அவன் தவறான மேய்ப்பன் என்று அது கண்டு கொள்ளும் போது, அவன் பின்னால் செல்வதிலிருந்து திரும்பிவிடும்.

6. ஆடு மேய்ப்பனின் மாதிரியை எவ்வாறு பின்பற்றுகிறது என நான் கவனித்தேன். தெருக்களின் வழியாக நடந்து வரும்போது அங்கு ஒரு சிறிய குறுகலான தெரு இருந்தது. குதிரை ரதங்களை பயன்படுத்திய அக்காலத்தில், கிழக்கத்திய நாடுகளில் தெருக்கள் அவ் விதமாக அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் ரதங்களைப் பெற்றிருந்த போது, அந்தத் தெருக்களின் வழியாக ரதங்களையும், குதிரைகளையும் ஓட்டிச் சென்றனர். அது மிகவும் ஒடுக்கமானதாக இருந்தது. எப்போதாவது நீங்கள் அகலமான விசால மான தெருவைப் பார்க்க முடியும். அப்படிப்பட்ட தெருவைக் காண்பது மிகவும் அரிது. அந்த அகலத்திற்கு இருபுறமும் தூண்கள் நடப்பட்டிருக்கும். ஓ, சில நேரங்களில் வீதிகள் பன்னிரண்டு அடி அகலமாகக் கூட இருக்கலாம். அவைகளில் அனேகம்...

நார்வே தேசத்தில் ஒஸ்லோ என்னுமிடத்தில், பழைய பட்டினங்களில், தெருக்களின் அகலம் ஏறக்குறைய எட்டு அடி அகலம் கொண்டதாக மட்டுமே இருக்கும். அவை பதினைந்து நூற்றாண்டு பழைமையுடையவை. அப்போது அவர் கள் உந்து வண்டிகளைப் பெற்றிருக்க வில்லை என்று நீங்கள் கண்டுகொள்ள லாம். இந்த நவீன காலத்தில், உந்து வண்டிகளை அகலமான வழிகளில் செல்ல இழுத்துக் கொண்டும் முட்டித் தள்ளிக் கொண்டும் செல்லுகிறார்கள். பாருங்கள், நாகூம் அவைகளை விசாலமான வழி என்றழைத்தார்.

பிறகு சிக்காகோவின் வெளிச் சுற்றுப் பாதையில் நின்று கொண்டிருக்கும் போது, எவ்வாறு மூன்று மற்றும் நான்கு வழிச் சாலைகள் அருகே சென்று ஒரு பெருவழிச் சாலையாக இருக்கிறது என்று அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன். தெருக்களின்

மத்தியில் பள்ளமும், இரு பக்கமும் தெருப்பாதை உயர்ந்தும், பிரிந்து காணப் படும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் எவ்விதம் ஒரு பொத்தானை அழுத்துகிறார்கள், பல மைல்கள் தூரம், புகை வண்டி உயர உயரச் சென்று கொண்டிருக்கும்; வித்தியாசமான சாயங்கால வேளையிலும், பகல் வேளை களிலும், போக்குவரத்தில் வித்தியாசத்தை உண்டாக்கும். அகலமான பாதைகள். அக் காலத்தில், சந்துகளில் ஒரு சில, முழுக்க முழுக்க நெடுஞ்சாலை போல இருக்கும்.

7. ஆனால் இந்த மேய்ப்பன் பட்டினத் தின் வழியாய் வரும்போது, அங்கே ஓர் இரைச்சல் உண்டாகும். அவனைப் பின் தொடர்ந்து ஒரு பெரும் ஆட்டு மந்தையே வரும். இப்பொழுது கிழக்கத்திப்புத்திரர் தங்களுடைய அருமையான சுவையுடைய எல்லா உணவு வகைகளையும் தெருக்களி லேயே பரப்பி வைப்பார்கள். அவர்களின் எல்லா வகையான பழங்களையும், மாமிச

வகைகளையும், அவர்கள் உற்பத்தி செய்கிற எல்லாப் பொருட்களையும் கூட அவ்விதமாக தெருக்களில் பரப்பி வைப் பார்கள்..... இங்கு நீங்கள் கட்டிடங் களுக்குள் பாதுகாப்பாய் வைப்பது போல. எல்லாவற்றையும் ஒன்றின் மேல் ஒன்றாகப் போட்டு வைக்கிறார்கள். அருகே இருக்கும் நடைபாதைகளில் சென்று நீங்களும் அவைகளை வாங்கு கிறீர்கள். அங்கே, பக்கத்தில் செல்வதற்கு வழி இருக்காது; அது வெறுமனே ஒரு தெரு. ஆகவே ஒவ்வொருவரும் தெருக் களில் நடந்து செல்கிறார்கள். உருளையான கற்கள் பதித்த அந்தத் தெருக்களில் அவர் கள் நடந்து செல்கின்றனர்.

இங்கே, தெருவில் ஒரு மேய்ப்பன் நடந்து வருகிறான். நடந்து கொண்டே, நடந்து கொண்டே வருகிறான். ஒரு நகர வட்டார தூரத்திற்கு நீண்ட ஒரு ஆட்டு மந்தை அவன் பின்னால் வருகிறது.

அவர்களால் விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட அந்தப் பொருட்களுக்குப் பக்கத்திலேயே அவைகள் நடந்து வரு கின்றன; வலது புறம் அல்லது இடது புறம் திரும்புவதேயில்லை; அந்த மேய்ப்பன் மீதே தங்கள் கண்களை வைத்துள்ளன. அவன் பின்னாலேயே செல்கின்றன. "ஓ, தேவனே, மேய்ப்பன் என்றால் என்ன பொருள், இடது பக்கமோ வலது பக்கமோ அம்மந்தை சாயவில்லை. அதன் மீதோ அல்லது இதன் மீதோ இச்சை கொள்ள வில்லை. ஆனால் அந்த மேய்ப்பனுடைய காலடிச் சுவடுகளையே பின்பற்றுகின்றன. அவைகள் தங்களுடைய மேய்ப்பனையே பின்பற்ற விரும்புகின்றன" என்று எண்ணி னேன்.

**ஒரே செய்தியை அநேகர் மேய்கிறார்கள் ஆனால் அவர் செம்மறியாடுகளை மட்டுமே அடையாளம் கண்டு கொள்கிறார், நான் என்ன பொருள் கொள்கிறேன் எனக் காண்கிறீர்களா? செம்மறியாடு மட்டுமே. மறுபடி பிறந்த செம்மறி ஆடு.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-01-29 இயற்கைக்கு மேம்பட்டவைகள்

8. ஒருநாள் சிறிய பிரிட்டிஸ் ஜீப் ஒன்றில் பயணித்த போது நான் கவனித்தேன், அங்கே அந்த மலையின் மீது பலவகையான மிருகங்களை ஒரு மேய்ப்பன் போஷித்துக் கொண்டிருந்தான். அவைகளை அவன் மேய்த்துக் கொண்டிருந்தான். அவைகள் தங்களைத் தாங்களே வழிநடத்திக் கொண்டு, தங்களுக்கென இடங்களைப் பிடித்துக் கொண்டிருந்தன. அதற்குள்ளேயே அவன் செம்மறி ஆட்டு மந்தையை உடையவனாயிருந்தான்; அதற்குள் அவனுக்கு வெள்ளாடுகளும் இருந்தன; அவைகளுக்குள் அவன் கோவேறு கழுதைகளை உடையவனாயிருந்தான்; ஒட்டகங்களும் இன்னும் பலவும் இருந்தன. அவைகள் எல்லா

வற்றையும் அவன் மேய்த்துக் கொண் டிருந்தான். எல்லாமும் மேய்ந்து கொண் டிருந்தன. மேய்ப்பன் அவைகளைக் கவ னித்துக் கொண்டேயிருந்தான். "என்னே, ஒரு மேய்ப்பன் என்றால், இவ்விடத்தில் அதற்கு பலவிதமான விளக்கங்கள் உண்டு" என்று சொல்லிக் கொண்டேன்.

“ஓ”, “மேய்ப்பன் என்றால் மேய்ப்பவ னாக இருக்கிறான்”. ஆனால் திரு. பிரான் ஹாம், உங்களுக்குத் தெரியாத இதில் வினோதமான காரியம் என்னவென்றால், இரவு வேளை வரும்போது, அவைகளைக் கவனியுங்கள்.” “எல்லாச் செம்மறியாடு களும் சரியாக நேரே மேய்ப்பனிடத்தில் சென்றடையும்” என்று அவர் கூறினார். “கோவேறு கழுதைகள் அங்கே அந்த மேய்ச்சல் தளத்திலேயே தங்கிவிடும்.” “ஒட்டகங்களும் அவ்வாறே மேய்ச்சல் தளத்தில் தங்கிவிடும்.” “வெள்ளாடுகளும் அவ்வாறு மேய்ச்சல் தளத்தில் தங்கி விடும்.” ஆனால், “இரவு வேளை வந்த

போது செம்மறியாட்டு மந்தை நேராக மேய்ப்பனிடத்தில் வந்தடையும். ஏன்? செம்மறியாடுகள் இரவில் தொழுவத்தில் மடக்கப்பட்டு பாதுகாக்கப்படும்” என்றார்.

நான் - நான் “மரியாதைக்குரியவரே, அதுபோல பேசாதீர்கள்; அப்படியானால், இங்கே, இந்த சாலையின் மத்தியில் நான் கூச்சலிடும்படியாய் என்னை ஆட்படுத்து கிறீர்கள்” என்று கூறினேன். பாருங்கள்? இரவு வேளை வந்து கொண்டிருக்கிறது. ஒரே செய்தியை அநேகர் மேய்கிறார்கள் ஆனால் அவர் செம்மறியாடுகளை மட்டுமே அடையாளம் கண்டு கொள்கி றார், நான் என்ன பொருள் கொள்கிறேன் எனக் காண்கிறீர்களா? செம்மறியாடு மட்டுமே. மறுபடி பிறந்த செம்மறி ஆடு. "அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்."

ஆகவே தேவன் ஒருவேளை, சில நேரங்களில், உங்களுக்கு ஏதோ ஒரு சிறிய காரியம் சம்பவிக்க அனுமதிப்பார். அவருக்கு மிக அருகில் கொண்டுவருவதற்கும், கொஞ்சம் அதிகப்படியாக உங்களை நேசிப்பதற்கும், பின்பு விசேஷித்த வழிநடத்துதலை, ஒரு சுகமாக்குதலைக் கொடுப்பதற்குமாகும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: *யோபு, 55-0223, பத்தி எண் E-14*

ஒரு சமயம் இப்படியாக கூறப்பட்டது, உங்களுக்குத் தெரியும்; இது அதிகாரப்பூர்வமானதா அல்லது இல்லையா என்பது எனக்குத் தெரியாது. பாலஸ்தீனாவில் இருக்கிற மிஷனரி எனக்கு இதைக் கூறினார். எது எப்படியாயினும், ஒரு ஆட்டுடன் ஒரு—ஒரு மேய்ப்பன் வந்து கொண்டிருப்பதை அவர் பார்த்தாராம். மேலும் அவர், "ஒரு ஆட்டை அவர் சுமக்க வேண்டியதாயிருந்தது, அந்த ஆட்டின் கால் முறிந்திருந்தது, அதில் கட்டு போடப்பட்டிருந்தது. அவர் இன்னும், "ஐயா, அந்த ஆடு விழுந்து விட்டதா, விழுந்து காலை ஒடித்துக் கொண்டதா?" என்று கேட்டார்.

அவர், "இல்லை" என்று கூறினார்.

"அதன் காலுக்கு என்னவாயிற்று?" என்றார்.

அதற்கு அந்த மேய்ப்பன், “அதை நான் ஒடித்து விட்டேன்” என்றார்.

“நீரா அதை ஒடித்து விட்டீர்?” என்று கேட்டார்.

“அதைச் செய்திருப்பீரேயானால் நீர் ஒரு கொடூரமான மேய்ப்பனாக இருக்க வேண்டும்” என்றார்.

அதற்கு அவர், “இல்லை” என்று கூறி னார். அவர், “பாருங்கள், இந்த ஆடு என்னைப் பொருட்படுத்துவதில்லை, அழிவை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது, அது கொல்லப்படப்போகிறது என்பதை அறிந்திருந் தேன். ஆகவே, அது என்னை நெருங்கி வரு வதற்காக அதன் காலை முறிக்க வேண்டியதா யிற்று. அதற்கு சிறிய பிரத்தியேகமான வழி நடத்துதலைக் கொடுப்பதற்காக, என்னுடைய கரத்தினாலேயே அதைப் போஷிக்க வேண்டும். அது, அதை என்னை அதிகமாக நேசிக்கச் செய்யும்” என்று கூறினார்.

ஆகவே தேவன் ஒருவேளை, சில நேரங்களில், உங்களுக்கு ஏதோ ஒரு சிறிய காரியம் சம்பவிக்க அனுமதிப்பார். அவருக்கு மிக அருகில் கொண்டுவருவதற்கும், கொஞ் சம் அதிகப்படியாக உங்களை நேசிப்பதற்கும், பின்பு விசேஷித்த வழிநடத்துதலை, ஒரு சுக மாக்குதலைக் கொடுப்பதற்குமாகும். நீங்கள், "ஆம், கர்த்தாவே, அது நீர் என்று விசுவா சிக்கிறேன்" என்று கூறுவீர்கள். பாருங்கள்? அதுதான் இது. தேவன் எவ்வாறு அதைச் செய்கிறார் என்று பாருங்கள்? அவர் அதிசய மானவரல்லவா? அவரை நாம் விசுவாசித்தால் மட்டும் போதும்.

சுற்றித்திரிந்து கொண்டிருக்கும் இந்தப் பரிதாபமான சிறிய தாய்மார்கள், மதுபான கொண்டாட்ட விருந்து நிகழ்ச்சிகளுக்கு ஓடிக்கொண்டு, இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்து, அந்தச் சிறு குழந்தையை தவறான வழியில் வளர்க்கத் தொடங்குகிறார்கள், சிலசமயங்களில் உங்களை மேலே நோக்கிப்பார்க்கும்படி செய்ய இயேசு அந்த ஆட்டுக்குட்டியை எடுக்க வேண்டியிருக்கலாம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஆடுகளின் நல்ல மேய்ப்பன், 57–0308

தாயாரே, அந்தச் சிறு குழந்தை மரணத் தினால் உங்கள் கரங்களை விட்டு பறிக்கப் பட்டபோது, நீங்கள் சிலசமயங்களில் வியப் படைகிறீர்கள். ஆடுகளோடுள்ள சிறு கதை யானது அதை வைத்தும் சொல்லப்படுகிறது. ஒரு ஓவியம் தீட்டுபவரால் வரையப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் ஒரு-ஒரு ஓவியம் அங்கே இருந்தது. அவருடைய பெயர் எனக்குத் தெரியவில்லை. ஆனால் **அவர்** ஆட்டை, சிறு ஆட்டுக்குட்டியை **தமது** கரத்தில் வைத்திருந்தார். அந்த தாயோ (தாய் ஆடோ - மொழிபெயர்ப்பாளர்) மேலே நோக்கிப்பார்த்தபடி, நெடுக பின்தொடர்ந்து போய்க்கொண்டு, தன்னுடைய கண்ணை **அவர்** மேலேயே வைத்திருந்தது. ஓவியரா கிய அம்மனிதன் இந்தக் குறிப்பிட்ட நேரத்

தில், அந்த மேய்ப்பனைக் கண்டு, அருகில் சென்று, அந்தச் சிறு ஆட்டுக்குட்டியை சுமந்துவரும் அந்த மேய்ப்பனைப் பார்த்து, "நீர் ஏன் அந்த ஆட்டுக்குட்டியை சுமந்து வருகிறீர்? அது முடமாகிவிட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை."

"அந்த ஆட்டுக்குட்டிக்கு என்ன பிரச்சினை?" என்று கேட்டார்.

18. அதற்கு, "ஆட்டுக்குட்டியிடம் எந்த தவறுமில்லை; தவறு இந்த தாயாகிய பெண் ஆட்டிடம் தான். இது இனியும் என்மேல் கவனம் செலுத்தாமல் அவ்வண்ணமாக இருந்தது. இது இனி நான் சொல்வதைக் கேட்காது. எனவே நான் கரம் நீட்டி இதனுடைய ஆட்டுக்குட்டியை தூக்கி எடுக்க வேண்டியதாயிற்று, இப்பொழுதோ இது நாள் முழுவதும் என்னையே பார்த்துக்கொண்டிருக் கிறது" என்றார்.

சிலசமயங்களில் தேவன் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. சுற்றித்திரிந்து கொண்டிருக்கும் இந்தப் பரிதாபமான சிறிய தாய்மார்கள், மதுபான கொண்டாட்ட விருந்து நிகழ்ச்சிகளுக்கு ஓடிக்கொண்டு, இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்து, அந்தச் சிறு குழந்தையை தவறான வழியில் வளர்க்கத் தொடங்குகிறார்கள், சிலசமயங்களில் உங்களை மேலே நோக்கிப்பார்க்கும்படி செய்ய இயேசு அந்த ஆட்டுக்குட்டியை எடுக்க வேண்டியிருக்கலாம். அப்போதும் நீங்கள் அதற்குச் செவிகொடாவிட்டால், ஓநாய் உங்களைப் பிடித்துக்கொள்ளும். அப்போது நீங்கள் போய்விடுவீர்கள். ஓ, நாம் ஆடுகளைக் குறித்து நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

# பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால், ஆடுகள் மேய்ப்பனுடன் கூடவே இருக்கவேண்டும்



# செய்தி: 63-06-30M மூன்றாம் யாத்திரை

பிசாசு மிகவும் சாமார்த்தியமுள்ளவன்.

ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு, முதலில் என்ன செய்யவேண்டு மென்று அவனுக்குத் தெரியும்.

அவனை மேற்கொள்ள வேண்டு மானால் நீங்கள் செய்யவேண்டிய ஒன்றே ஒன்று, கிறிஸ்துவின் மேல் சார்ந்து, உங்களைத் தாழ்த்தி, அவர் உங்களை வழிநடத்த அனுமதிப்பதேயாகும்.

வேறு எந்த வகையிலும் நீங்கள் அவனை மேற்கொள்ள முடியாது.

199. உங்கள் புத்தி சாதுரியம் அதைச் செய்யமுடியாது.

நீங்கள் விசுவாசித்து, அவர் மேல் சார்ந்திருக்கவேண்டும்.


அவரே மேய்ப்பன்.

ஓநாய்களை விலக்குவது ஆடுகளின் வேலையல்ல.

பாதுகாப்பாக இருக்க வேண்டு மானால், ஆடுகள் மேய்ப்பனுடன் கூடவே இருக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்குள் மாத்திரமே பாது காப்புண்டு, வார்த்தைதான் கிறிஸ்து, அதுவே பாதுகாப்பான ஸ்தலம்.

**ஆட்டுக்குட்டி ஒரு சாதுவான சிறு மிருகம். தானே தனக்கு உதவி செய்து கொள்ள முடியாத மிருகம். அது உதவியைச் சார்ந்து இருக்கிறது**



# செய்தி: 56-08-05 சபையும் அதன் நிலையும்

30. ஆட்டுக்குட்டி ஒரு சாதுவான சிறு மிருகம். தானே தனக்கு உதவி செய்து கொள்ள முடியாத மிருகம். அது உதவியைச் சார்ந்து இருக்கிறது.

''உலாவும் காவலனாக'' நான் பணியாற்றின காலத்திலே ஒரு புல்வெளி வழியாய் காரோட்டிச் சென்றேன்.

ஒரு ஆட்டுக்குட்டி மந்தையிலிருந்து தவறிப்போய் ஒரு முட்கம்பி வேலியில் மாட்டி கதறி அழுதுகொண்டிருந்தது.

அதை எடுத்து காரில் வைத்து, சுமார் அரை மைல் தூரத்தில் சென்று கொண்டிருந்த மந்தையில் விட்டேன்.

அந்த ஆட்டுக்குட்டியை நான் கம்பி யிலிருந்து விடுவிக்காதிருந்தால், காக்கை அதன் கண்களைக் கொத்தி தின்று விட்டிருக்கும்.

ஆட்டுக்குட்டியைத் தப்புவித்து என் கைகளில் ஏந்திக்கொண்டு சென்றேன். அது என்னிடம் வர மறுக்கவில்லை. அதைத் தூக்கி எடுத்ததும் அழுவது நிறுத்தி விட்டது.

அதை யாரும் தொட்டுக்கூட இருக்க மாட்டார்கள். இருந்தபோதிலும், தூக்கி எடுக்கும் போது அது அதிர்ச்சியடைய வில்லை. உதவிக்கு வாஞ்சையாயிருந்தது.

உங்களுக்கு விளங்குகிறது என்று நம்புகிறேன். அது என்னிடமிருந்து ஓடப் பார்க்கவில்லை. என்னை உதைக்கவும் இல்லை. கடிக்கவுமில்லை.

செம்மறியாட்டுக் குட்டிகள் உதைப்ப தில்லை. அவைகள் தாழ்மையான மிருகங்கள்.

இந்த ஆட்டுக்குட்டியை அந்த மந்தை யில் விட்டதும் சில நிமிடங்களுக்குப் பிறகு அதன் தாய் அதைக் கண்டது. தாயினிடம் வந்து சேர்ந்த குட்டிக்கு என்ன சந்தோஷம்!



# மீட்பு சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங்கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

செய்தித்தாளை படிக்க அறியும் எவரும்... வானம் கறுத்து அந்தகாரப்படு கின்றது, மேகங்கள் தோன்றுகின்றன என்பதை நாம் காணும்போது, மழை பெய்யப் போகின்றது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அதை நாம் காற்றில் உணருகிறோம். தூரத்தில் மின்னல் கொடிபடர்ந்து, காற்று பலமாக அடிக்கும் போது, புயல் வரப்போகிறதென்றும், விரை வில் மழை பெய்யுமென்றும் அறிகிறோம். அது போன்று, செய்தித்தாளைப் படிக்க இயலும் எவரும், தேசங்களின் நிலையைக் கண்டு, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது என்பதை அறிந்து கொள்வர். ஒருவர் தோளில் துப்பாக்கியை வைத்துக்

கொண்டு, யுத்தத்துக்காக எல்லா விதமான போராயுதங்களையும் வைத்துக் கொண்டு, எவ்வித உடன்பாடுமின்றி ஒருவரோ டொருவர் விவாதம் செய்து கொண்டு, மாநாடுகளில் காலணிகளால் உதைத்தும், மேசையைக் கையால் பலமாக குத்து வதையும் காணும் போது, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது என்பதை அறிந்து கொள்வீர்கள். அது ஜனங்களுக்கு அத்த கைய உணர்ச்சியை அளிக்கிறது. உலகம் என்று நாம் அழைக்கும் அந்த வெளிப்புற உலகம், அழிவு வரப்போகிறதென்றும், இந்த அணுசக்தி காலத்தில் அணு ஆயுதங் கள் வெடிக்கலாம் என்னும் உணர்வைப் பெற்றுள்ளது.

ஆனால் கிறிஸ்தவனோ அது கர்த்தருடைய வருகையின் அடையாளம் என்பதை அறிந்திருக்கிறான். பாருங்கள்? ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன்

மூலம் நீங்கள் எதை காண்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஏனெனில் அந்த நேரத்தில் என்ன நேரிடுமென்று நமது கர்த்தர் நமக்கு திட்ட வட்டமாக அறிவித் துள்ளார். அந்த வேளையும் நாழிகையும் நாம் அறியாமல் போனாலும், ஏதோ ஒன்றை இப்பொழுது நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவோம்.

26. சில நாட்களுக்கு முன்பு, ஆப்பிரிக் காவில் நான் கண்ட ஒரு ஆட்டுக்குட்டி யைக் குறித்து இங்கு கூறினேன். அது பட்டியிலிருந்து வெளியே விடப்பட்டு அமைதியாக புல் மேய்ந்து கொண்டிருந் தது. அப்பொழுது திடீரென்று அதற்கு பயமுண்டானது. இந்த குட்டிக்கு என்ன நேர்ந்ததென்று நான் வியந்தேன். ஒரு செம்மறியாடு வழி தவறிவிட்டால் தானாகவே தன் இடத்திற்கு மீண்டும் வர அதற்கு தெரியாது. அது முழுவதுமாக வழி

தவறிப் போய் விடும். ஆகையால் தான் கர்த்தர் நம்மை செம்மறியாடுகளுக்கு ஒப்பிடுகிறார், நாம் வழிதப்பினால், நம்மை மீண்டும் கொண்டு வர ஒருவருக்கு மாத்திரமே முடியும், அவர்தான் மேய்ப்பர். இந்த ஆட்டுக் குட்டி பட்டியிலிருந்து வெகுதூரம் அலைந்து சென்று, கதறிக் கொண்டிருந்தது. அந்த புல்லின் கீழ் பதுங்கியுள்ளதை நான் கவனித்தேன், ஆனால் அது கவனிக்கவில்லை. ஒரு ஆட்டுக் குட்டிகோ அல்லது செம்மறி யாடுக்கோ, மானைப் போன்று மோப்பம் பிடித்து எதிரியை அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அது மரணம் அருகிலுள்ளது என்னும் உணர்வைப் பெறும். அங்கு ஒரு சிங்கம் மெல்ல பதுங்கி வந்தது. அது ஆட்டுக் குட்டியை மோப்பம் பிடித்து, அதைக் கொன்று தின்ன அங்கு வந்தது. ஆட்டுக் குட்டிக்கு

பயமெடுத்துக் கொண்டது. அதற்கு காரணம் தெரியவில்லை, ஆனால் மரணம் மிக அருகில் பதுங்கியுள்ளது என்பதால் அது பயந்தது.

27. உலகமும் அதே போன்ற பயங் கொண்ட நிலையில் தற்பொழுது உள்ளத னால், அவர்கள் தெருவில் தொண்ணூறு மைல் வேகத்தில் காரோட்டி சென்று, மது கடைக்குள் நுழைந்து, இரண்டு மணி நேரம் மது அருந்தி விட்டு, வீடு செல்கின்றனர். அது பலமான தாக்குதல்...

யாரிடமாவது நீங்கள் பேசினால், அவர் கள் கோபமடைகின்றனர். அன்றொரு இரவு நான் கூடாரத்தில் பேசிவிட்டு, சகோ. நெவிலுக்கு வந்திருந்த சில அழைப்புகளை நான் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஒவ்வொரு முறையும் நான் நர்ஸ் அல்லது டாக்டரிடம்

பேசினபோது, அவர்கள், ''எனக்கு ஒன்றும் தெரியாது என்று கோபமாக பதிலளித்தனர்.

“என்ன நேர்ந்தது? எல்லோருமே கோபத்தை வெளிப்படுத்துகின்றனரே” என்று நினைத்தேன். மனோதத்துவ நிபுணர் கள் இப்பொழுது டாக்டர்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டியதாயுள்ளது.

ஆனால் அதற்கு ஒரு வழியுண்டு. அது தான் கிறிஸ்து.

28. கிறிஸ்தவன் அந்த நிலையில் இருக்கக் கூடாது, நாம் மகிழ்ச்சி கொண்ட வர்களாய் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்க வேண்டும். ஏனெனில் அது அருகாமையிலுள்ளது; கல்வாரியின் குளிர்ந்த காற்றை நம்மால் உணர முடிகின் றது. வாக்குத்தத்தம் செய்த பரலோகத்தின் தேவனை, இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது புரிந்த அதே செயல்கள் கடைசி

நாட்களில் திரும்பவும் வரும் என்னும் வாக்குத்தத்தத்தையும் நாம் காணும் போது, அது கண்கூடாக நிறைவேறுவதை நாம் காண்கிறோம். அது என்ன? மழை வரும் போது கிடைக்க பெறும் புத்துணர்ச்சியைப் போன்ற புத்துணர்ச்சியின் சுவாசமே. பாருங்கள்? மீட்பு சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங் கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது. உலகம் அதை காண்பதில்லை. அவர்கள், முன் காலங்களில் நடந்ததுபோல், இப்பொ ழுதும் அதை கேலி செய்கின்றனர். ஆனால் நாமோ அது அருகாமையில் வந்துகொண் டிருக்கிறது என்பதை அறிவோம்.

# நல்ல மேய்ப்பன்

## 1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து